"பூவின் மணம்," "மரமாம்பழம்," "பார்ப்போம்!" இவைகள் இதில் முக்கியமானவை.
அடுத்த பகுதியில், "கனவோ, நினைவோ," வெளிவரும்.

தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி௵ ஆவணிமீ 4உ (20-8-'22.) | ப. 17.

விஷய அடக்கம்.

1. வர்த்தமானம் 153
2. பார்ப்போம்! 155
3. "தர்மத்தைக் கைவிடுவதா?" 156
4. ஒன்றுக்கொன்று பொருந்தவில்லை 156
5. "ஜாக்கிரதையாய் இருங்கள்!" 157
6. மட்டந்தட்டிவிட்டார்! 157
7. இந்திய வாலிபர்கள் 158
8. விடுதலை யடைந்தார் 158
9. பரம்பரைஆண்டிகளா? 158
10. Sir P. S. சிவஸ்வாமி அய்யர் 159
11. மரமாம்பழம் 160
—ஸ்ரீமான் "ராமசந்திரர்" எழுதியது
12. பூவின்மணம் 161
—ஸ்ரீமான் P. N. அப்புஸ்வாமிஅய்யர், B.A., B.L., எழுதியது.
13. புயற் காற்று 161
ஸ்ரீமான் V. நாராயணய்யர் M.A., M.L., எழுதியது.
14. "மைக்ரோப்"கள் 162

வர்த்தமானம்

சென்ற வாரம் தேசபந்து சித்தரஞ்சன்தாஸ் சிறையிலிருந்து விடப்பட்டார். கல்கத்தா நகரத்தில் ஒரு பெரிய கூட்டம்கூடி அவரை வரவேற்றி கௌரவப்படுத்தினார்கள். சட்ட மறுப்பு ஆரம்பிக்கலாமாவென்று விசாரணை செய்துவரும் காங்கிரஸ் கமிட்டியார் அந்த சமயம் கல்கத்தாவிலிருந்ததால், அவரை அவருடைய வீட்டிற்குச் சென்று கண்டார்கள். அவர் சிறையிலிருந்து வெளிவருமுன், ஒற்றுழையாமையிலிறங்கி தங்கள் தொழிலை நடத்தாமலிருந்த பாபு சென்குப்தா முதலான கல்கத்தா வக்கீல்கள் சிலர் திரும்பவும் 'பிராக்டிஸ்' பண்ண ஆரம்பித்தபடியால், அவர்கள் தேசபந்து தாஸின் அனுமதியின் பேரில் தான் ஆரம்பித்தார்களென்றும், அவரே சிறை மீண்டவுடனே மறுபடியும் வக்கீல் வேலை பார்ப்பாரென்றும் ஒரு வதந்தி பரவியிருந்தது. இதைப் பற்றி அவரைக் கேட்டதில் தான் மறுபடியும் வக்கீல் வேலையில் ஒருநாளும் அமரப்போவதில்லை, ஆனால் பிறர் அவரவர்களுடைய சௌகரியங்களையனுசரித்துச்செய்தல் வேண்டுமென்றும் சொன்னார். தேசத்தின் நிலைமையைப்பற்றி அவருடைய அபிப்பிராயத்தைக் கேட்டதற்கு தனக்கு 6 மாதமாக உலக வியவகாரமே தெரியாதாகையால், எல்லாவற்றையும் தீர விசாரித்து ஆலோசனை செய்துதான் சொல்லவேண்டுமென்று சொல்லிவிட்டார்.

மஹாராஷ்ட்ரத்தில் அக்ரேஸரராக விருந்துவரும் மிஸ்டர் N. C. கேல்கார், முதலில் மஹாராஷ்ட்ர காங்கிரஸ் கமிட்டியின் அக்ராசனாதிபத்யத்தையும், பிறகு காங்கிரஸ் "ஒர்க்கிங் கமிட்டி" அங்கத்தினராக யிருந்ததையும், ராஜிநாமா கொடுத்துவிட்டார். இதற்குக் காரணமென்னவென்றால், காங்கிரஸ் சபைகளில் அதிகார தோரணை வகித்துவருபவர், தங்களுக்குக் காங்கிரஸ் கட்டளைகளில் முழுசம்மதமில்லாமலிருந்தாலும், அந்த அதிகாரத்தை வகித்து வரவேண்டுமென்றால், எவ்வகையிலும் காங்கிரஸுக்கு விரோதமாகப் பேசவும் நடக்கவும் கூடாதென்று ஹகீம் அஜ்மல் கான் முதலானவர்கள் அபிப்பிராயப்படுகிறார்களாம். தன்மனது சம்மதிக்காத காரியத்தை வாயைத் திறவாமல் நடத்த இஷ்டமில்லாததால் தான் தன்னுடைய அதிகாரங்களை ராஜிநாமா செய்ததாக Mr. கேல்கார் தெரியப்படுத்தியிருக்கிறார்.

சென்றவாரம் உலகவாழ்க்கையில் வெகு மேன்மையாக இருந்துவந்த சிலர் தேக வியோக மடைந்தனர். போன "தமிழுலகி"ல் பம்பாய் வர்த்தகப் பிரபுவான ஸர் விதல்தாஸ் தாக்கர்ஸி லெஜிஸ்லேடிவ் அஸெம்ப்ளி அங்கத்தினராக விருந்ததை ராஜிநாமா செய்ததாக நாமெழுதினோம். அதற்குக் காரணம் அவருக்கு சற்று உடம்பு அசௌக்கியமாக இருந்ததே. சென்ற வாரம் அவர் திடீரென்று காலமாகிவிட்டார். பம்பாய் ராஜதானியின் கைதொழில் விருத்திக்கு ஒரு முக்கிய ஆதாரமாக இருந்தார். அவரால் வெகு ஜனங்களுக்கு நன்மையுண்டு. மிக்கக் கொடையாளி. தனது வியாபாரங்களை மட்டும் கவனித்து சுயநயம் பாராட்டி வராமல் தன்னாலியன்றவரை தேச உழைப்பில் ஈடு பட்டிருந்தார். சென்றவாரம் அயர்லாந்து தேசத்திற்கு ஒரு திலகம் போன்ற ஆர்தர் கிரிப்பித் (Arthur Griffith) என்பவர் மாரடைப்பால், திடீரென்று மரணமடைந்தார். 30 வருஷகாலமாக அயர்லாந்தென்னும் கப்பலுக்குப் பாய்மரம் போலிருந்து வந்தவர். அத்தேசத்தில் ஒற்றுழையாமையைப்போன்ற 'சின்பைன்' (Sinn-Pain) என்ற ஓர் புது இயக்கத்தை இவரே நிலைநாட்டினார். தேசத்திற்காக அவரைப்போல் பாடுபட்டவர் வெகு சிலர். இவர் இறந்த மறுநாள் இங்கிலாந்தில் நிரம்ப செல்வாக்குள்ள அநேக பத்திரிகைகளுக்குத் தலைவராக விருந்த லார்டு நார்த் க்ளிப் என்பவரும் காலகதியடைந்தார்.

சென்ற வாரம் சென்னை ஸர்வ கலாசாலை சீர்திருத்தத்தைப் பற்றி கல்வி மந்திரியாக இருந்து வரும் ஸ்ரீமான் பாத்ரோ தயார்செய்திருக்கும் 'பில்' விஷயமாய் ஸர்வ கலாசாலை சபை(Senate)யில் தர்க்கம் செய்யப்பட்டது. அந்த 'பில்'லுக்கிணங்க ஸ்ரீமான் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் "சென்னையில் இப்பொழுதிருக்கும் ஸர்வ கலாசாலைக்கு பதிலாக, மாணாக்கர்களுடைய படிப்புக்கும் வாஸத்திற்கும் தன்னுடைய ஆதிகாரத்திலேயே தன்னுடைய உத்தியோகஸ்தர்களைக் கொண்டு ஏற்பாடுசெய்யும் ஸர்வ கலாசாலை ஏற்படுத்தவேண்டும்," என்று ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். இந்தப் புதுசட்டமானது தற்காலம் சென்னை நகரத்திற்குள் இருக்கும் கல்லூரிகளுக்கு மட்டும் தான் மேலான சௌகரியங்களைக் கொடுக்குமாதலால், வெளியூரிலிருந்து வந்த அங்கத்தினர்களுக்கு இதிலிஷ்டமில்லை. ஆகையால் சென்னைக்கு இத்தகைய கலாசாலை ஏற்படும் முன் வெளியூர்களிலும் இதுபோன்ற கலாசாலைகள் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்று Senate தீர்மானித்தது. அநேகம் கலாசாலைகள் இப்பொழுது ஏற்படுத்தப் பணமகப்படுவது துர்லபமானதால், ஸ்ரீமான் பாத்ரோ கொண்டுவந்த சீர்திருத்தத்தையே Senate நிராகரித்து விட்டதாகச் சொல்லவேண்டும்.

சென்றபுதன்கிழமை சாயந்திரம் சென்னைஸர்வ கலாசாலை "கான்வகேஷன்" நடந்தது. கிரிஸ்டியன் காலேஜ் தலைமை உபாத்தியாயராக இருந்து வரும் Rev. W. Meston, கூடியிருந்த மாணாக்கர்களுக்குப்பிரசங்கம்செய்தார். படிப்பின் மேன்மையையும் அதனால் உலகத்திற்கு நாம் செய்யக்கூடிய உதவியையும் பற்றி வெகுநன்றாக எடுத்துச் சொன்னார்.

லண்டனில், ஜர்மனியிடமிருந்து சண்டைக்கு நஷ்டஈடு வசூல் செய்யும் விஷயங்களைப் பற்றி ஆலோசிக்கக் கூடியிருந்த பிரான்சு பெல்ஜியம் இடாலி முதலான தேசப் பிரதிநிதிகளுடைய கூட்டம், காரியம் ஒன்றுமாகாமல் கலைந்துவிட்டது. இதிலிருந்து பணத்தை வசூல் பண்ண கடுமையான வழிகள் பிறக்குமென்று தோன்றுகிறது. ஆனால் அப்படிச்செய்வதால் பயனொன்றும் விளையாது.

TAMIL WORLD

WE welcome with pleasure the first issue of the "Tamil World," a new Tamil weekly, published at Mylapore, which we gather, is the fruit of the conjoint labours of a group of brilliant young men with Mr. S. Pattabhiraman, M. A, as the Editor. The first issue is quite promising and the contents are varied and interesting. If the future numbers realise the promise of the first, with more of variety and less of scholarly length, the "Tamil World" would prove an asset.

'The Swarajya'

"தமிழ் உலகு."

"தமிழ் உலகு" என்று பெயர் வாய்ந்த வாரப் பத்திரிகை ஒன்று சென்னையில் ஆரம்பமாகியிருக்கிறதாகச் சின்னாள் முன் அறிவித்தோம். பிரதிவாரமும் வரும் அதைத் தொடர்ச்சியாகப்படித்துப் பார்த்ததில், தமிழ் மக்களுடைய அறிவைப் பல துறைகளிலும் வளர்க்க அது முயன்று வருகிறதென்பதில் சந்தேகமில்லை. அதன் ஆசிரியராகிய ஸ்ரீமான் எஸ். பட்டாபிராமன் ஆங்கிலம் கற்று எம். ஏ. பட்டம் பெற்றிருப்பதுடன், தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றவர்; உலக வியவகாரங்களையும் நவீன சாஸ்திரங்களையும் பல வகைச் சரித்திரங்களையும் தமிழர் அறிந்து உயர்வு பெறவேண்டுமென்ற ஆர்வங்கொண்டவர். அவரை ஆசிரியராகக் கொண்ட "தமிழ் உலகு" தனது லட்சியங்கள் நிறைவேறத்தக்க வழியில் ஊழியம் செய்யுமென்பது நிச்சயம். இது வரையில் வெளி வந்துள்ள மூன்று வாரப் பத்திரிகைகளிலும் சில வியாசங்களைச் சிறப்பாகக் குறிப்பிடுவது தகும். பூமியின் பிறப்பு, நேஷன், மீரா பாய் சரித்திரம் ஆகியவைகளைப் பற்றிய வியாசங்கள் புது அறிவைத் தமிழருக்கு அவர்கள் அறியக் கூடிய நடையில் புகட்டுவனவாயிருக்கின்றன. இந்தப் பத்திரிகை தழைத்து தனது கருத்து நிறைவேறப் பெறுமாறு கடவுள் கருணை பொழிய வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

சுதேசமித்திரன்.

THE TAMIL WORLD

WE commend to the reading public the "Tamil World," a new Tamil weekly published at Mylapore. The promise of the first and the second issues which we have received will gladden those interested in the new vernacular movement. Mr. Pattabhiraman, M. A. assisted by a number of talented and enthusiastic young men, will be the Editor. With Congress politics and wide sympathies with Science and Literature, we hope that the weekly will receive good support. The annual subscription of Rs. 5 is fair, as the get-up is quite attractive.

'The Hindu'

பார்ப்போம்!

பிரிடிஷ் பார்லிமெண்டில், இந்தியாவிலுள்ள ஸிவில் ஸெர்விஸிலிருக்கும் உத்தியோகஸ்தர்களுடைய நிலைமையைப் பற்றி ஸர் ஸாம்வல் ஹோர் என்னும் மெம்பர் ஓர் விவாதத்தைக் கிளப்பியதாக ராய்டர் மூலமாய் நாம் அறிகின்றோம். இந்தியா சீர்திருத்த சட்டத்தால் இத்தேசத்தில் பிரிடிஷ் ஸிவில் உத்தியோகஸ்தர்கள் தாம் மிகவும் சிறுமைப்பட்டு விட்டதாய்ச் சொல்லி வருகிறார்கள். இப்பொழுது காமன்ஸ் ஸபையிலும் இவ்விஷயத்தைப்பற்றியே எல்லோரும் மிக்கக் கவலையுடன் பேச நேரிட்டது. தங்களுடைய காரியத்தைச் செய்து முடிப்பதில் ஆங்கிலேயர்கள் எவ்வளவு சாமர்த்தியசாலிகளாக இருக்கிறார்களென்பதை நாம் இங்கே விஸ்தரிப்பதற்கு எண்ணவில்லை. இந்தியர்களான மந்திரிகளுக்கும் கீழ்ப்படிந்து நடப்பதே பிரிடிஷ் உத்தியோகஸ்தர்களுக்குப் பிடிக்கவில்லை. இதுதான் ரகசியம். இதை நமது அன்பர்கள் வெகு ஜாக்கிரதையோடு தமதுள்ளத்தில் வைத்திருப்பார்களாக. ஆகிலும் இவ்விவாதத்தின் சம்பந்தமாக நாம் இங்கே பேச எண்ணியிருக்கும் விஷயம் மற்றொன்று. அதுதான் நிரம்பவும் முக்கியமானது. இந்தியாவைப் பற்றிக் காமன்ஸ் ஸபையிலுள்ள மெம்பர்கள் இப்போது இப்பிரஸ்தாபங்கள் செய்ததின் பலனாக, பிரிடிஷ் பிரதம மந்திரியின் அபிப்பிராயங்களும் வெளியாகிவிட்டன. அவர் அவ்வாறு பேசியிருப்பது அவருடைய குற்றமல்ல. அக்குற்றம் பின்பு யாருடையது என்பதைப் பற்றியும் நாம் வேறொரு சமயத்தில் பேச நினைத்திருக்கின்றோம். ஆயின் இந்தியா சம்பந்தமாய் பிரிடிஷ் முக்கிய மந்திரியான Mr. லாயிட் ஜார்ஜ் இத்தருணத்தில் இவ்வளவு கபடமின்றியே தனது எண்ணங்களை வெளியிட்டிருப்பதற்காக இந்தியர்களாகிய நாம் மிகவும் சந்தோஷமடையவேண்டும். 1917-ம் வருஷத்தில் Mr. மாண்டேகூ இந்தியாவுக்கு ஸ்வய ஆக்ஷி ஸ்வதந்திரத்தை முற்றும் கொடுத்துவிடுவதே பிரிடிஷ் கவர்மெண்டாரின் நோக்கமெனப்பார்லிமெண்டில் பகிரங்கமாகச் சொல்லியிருக்கின்றார். மேலும் 1919-ம் வருஷத்திய இந்தியா சீர்திருத்த சட்டத்தை Mr. மாண்டேகூ நமக்குத் தந்தபொழுதும், அச்சட்டம் மேன்மேலும் இனி நமக்குக் கிடைக்கக் காத்திருக்கும் ஸ்வாதீனத்திற்கு முதற்படியாகுமென்றும் சொன்னார்.

அஃதெல்லாம் இப்போது வெறும் கதையாகிவிட்டது. இவ்வுலகத்தை சிருஷ்டிக்கையில் பிரும்மாவும் இவ்விந்தியாவை ஆங்கிலேயர்களது கையில் முழுவதும் ஒப்புவித்துவிட்டதாய் Mr. லாயிட் ஜார்ஜ் பிரசங்கம் செய்திருப்பது பிரிடிஷ் ஜனங்களின் வலிமையைக் காட்டுவதல்லவா? I. C. S. உத்தியோகங்களை வகிக்கும் பிரிடிஷ் மானிடரத்னங்களுக்கு ஏதாவது மானக்கேடுகள் உண்டாகுமேயாகில், பிறகு அவர்களுடைய கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக பிரிடிஷ் கவர்மெண்டார் சிறிதேனும் தயங்கமாட்டார்களென Mr. லாயிட் ஜார்ஜ் பார்லிமெண்ட் மெம்பர்களுக்கு தைரியம் சொல்லியிருக்கின்றார். மறுபடியும் ஓர் பிரளயம் வரும்வரையில், இந்தியாவிலிருக்கும் முப்பதுகோடி பாமர ஜனங்களுக்குத் தாங்களே 'கார்டியன்களாக'வும் இருக்கப்போவதாய் பிரிடிஷ் பிரதம மந்திரியார் பெருமை பாராட்டியிருப்பதை நாம் நன்றாக கவனிக்கவேண்டும். கோடிக்கணக்கான இந்தியர்களைத்தாமே ரக்ஷித்துவருவது கடமையாயிருக்க, அவர்களை நமது கையில் காட்டிக்கொடுப்பது சற்றும் தமக்கு தர்மமில்லையென்றே Mr. லாயிட் ஜார்ஜ் பிரிடிஷாருக்கு சமாதானமும் சொல்லியிருப்பது எவ்வாறு பொருத்தமுள்ளதாயிருக்கும்? I. C. S. இல் இருந்து வரும் பிரிடிஷ் ஸிம்மங்கள்தான் இம்முப்பது கோடி இந்தியர்களையும் நமக்குள் எவரும் விழுங்காமல் காத்துவந்திருப்பதாய் இவர் சொல்லுகின்றார்! பிரிடிஷ் ஸிவில் உத்தியோகஸ்தர்களுடைய சௌக்கியத்துக்காக இந்தியாவில் தான் எதையும் செய்யக்கூடுமென்று இவர் இத்தருணத்தில் கூறியிருப்பது, இந்தியர்களும் தங்களது ஸ்வய ஆக்ஷி சுதந்திரத்தைப் பெறுவதற்கோர் அறிகுறியாகக் காணப்படவில்லை. கவர்னருடனும், கவர்னர்ஜெனரலுடனும் நிர்வாக சபைகளில் இந்தியர்கள் மிகப்பெரியதோர் ஸ்தானத்தையும் வகித்து வருகையில், இவ்விந்தியாவில் இப்பிரிடிஷ் ரத்தினங்களில்லாவிட்டால் எல்லாம் கெட்டுவிடும் என்றும் Mr. லாயிட்ஜார்ஜ் இவ்வாறு ஆடம்பரத்துடன் சொல்வது ஏன்? பிரிடிஷ் பார்லிமெண்டில் கன்ஸர்வெடிவ் பக்கத்தார் சொற்படியெல்லாம் இவர் இப்போது ஆடிவருகின்றார். இதுவே முக்கியகாரணமாகவும் இருக்கின்றது. தவிரவும் மகாத்மா காந்தி கக்ஷியில் சேர்ந்திருப்பவர்களைப்பற்றி இவர் பிரசங்கம் செய்திருப்பதும் நல்லசகுனமாக நமக்குத் தோன்றவில்லை. இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் அஸெம்ப்ளியிலுள்ள மெம்பர்கள் மிகவும் பேச்சுவாயர்களாகவே இருந்தால் போதாதென்றும், சட்டசபைகளில் அவர்கள் எவ்வளவுதான் சாதுரியமாகப் பேசமுடிந்தாலும், I. C. S. இல் இருக்கும் பிரிடிஷ் உத்தியோகஸ்தர்களிடம் எப்படியும் அவர்கள் ராஜ்யபாரம் வகிக்கும் முறைகளையும் கற்றுக்கொள்ள வேண்டுமென்றும் Mr. லாயிட்ஜார்ஜ் கம்பீரமாகப் பேசியிருக்கின்றார்! அஸெம்ப்ளியில் தாம் அபாரமாய் சாதித்துவிட்டோமென்று செருக்குடனிருக்கும் மெம்பர்களுக்கு Mr. லாயிட்ஜார்ஜ் கடைசியில் நல்ல ஸன்மானம் செய்தார்! மேலும் அம்மெம்பர்களைப்பற்றியும் இவர் பேசியிருப்பதைப் பார்த்தால், அவர்களுடைய நடத்தையே பிரிடிஷ் கவர்மெண்டாருக்குத் திருப்திகரமாயில்லையென ஊகிக்கின்றோம். மறு எலெக்ஷனில் மகாத்மாகாந்தி கக்ஷியைச் சேர்ந்தவர்கள் கௌன்ஸில்களிலும்புகுந்து தம்முடைய ஸ்வபாவத்தையும் அங்கே காண்பிப்பார்களாகில், இந்தியா கவர்மெண்டாரும், இன்னும் இங்கிலண்டிலுள்ள பிரிடிஷ் மந்திரிகளும் பிறகு என்ன செய்வார்களென்பதை நாம் யோசிக்கவேண்டும்? ஒத்துழையாமை முழுவதும் பிசகெனக் கண்டு பிடித்து மகாத்மாவின் பக்கத்திற்சார்ந்தவர்கள் எங்கும் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களிலும் ஸ்தானங்களை யபேக்ஷித்து நின்று, வெற்றியுமடையமுடியுமென்பதை Mr. லாயிட் ஜார்ஜ் தனது புத்தியைக்கொண்டு முன்னமேயே அறிந்துவிட்டார். அஃது இவருடைய சாமர்த்தியத்திற்கு அழகுதான். ஆகிலும் மறுபடியும் நடைபெறும் எலெக்ஷனில், இப்போதிருக்கும் சட்டசபைகளிலுள்ள மெம்பர்கள் தோல்வியடைய நேரிடுமாகின், அக்கௌன்ஸில்களில் மகாத்மா காந்தி பக்கத்தார்கள் வந்து நிறைவதால், இந்தியாவிலுள்ள பிரிடிஷ் உத்தியோகஸ்தர்களுக்கு மிகுந்த எரிச்சல் நிச்சயமாய் உண்டாகும். மேலும் அப்போது அவர்கள் நடக்கும் விதத்தைத்தான் நாம் நன்றாகவும் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். Mr. லாயிட் ஜார்ஜ் ராஜ்யதந்திரத்தில் மகா நிபுணரல்லவா? வரும் விஷயங்களைத் தன்னுடைய நுண்ணறிவால் இவரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்-

கின்றார். ஆதலால்தான் 1919ம் வருஷத்திய இந்தியா சீர்திருத்தசட்டமும் முற்றும் ஸ்திரமானதில்லையென்று இவர் இப்பொழுதே சிலவார்த்தைகளையும் சொல்ல நேரிட்டது. பார்லிமெண்ட் முதலிய ராஜாங்க முறைகள் கீழ்நாட்டு இந்தியர்களுக்கும் பொருத்தமுள்ளவையாகுமோவென இவர் இப்போது பார்த்து வருவதாகவும் சொல்லிவிட்டார். இது தான் மிக்கக் கடுமையாக நமக்குத் தோன்றுகின்றது. மறு எலெக்ஷனில் மகாத்மா காந்தி கக்ஷியில் சேர்ந்தவர்கள் எங்கேயும் சட்டசபைகளில் திரண்டு வருவார்களேயாகில், அப்பொழுது பிரிடிஷ் கவர்மெண்டார் அவர்களையும், கெட்ட பையன்களைக் கலாசாலைகளிலிருந்து துரத்திவிடுவது போலவே, கூசாமல் விரட்டிவிடுவார்களா? இல்லாவிட்டால். பார்லிமெண்ட் முதலான பெருமைகளுக்கு இந்தியர்கள் முழுவதும் தகுதியறறவர்களென்றே, Mr. மாண்டேகுவின் இந்தியா சீர்திருத்த சட்டமும் நம்மிடமிருந்து பிடுங்கப்பட்டுவிடும். ‘சட்டசபைகளில் மெம்பர்கள் எல்லோரும் பிரிடிஷ் ஜனங்களுக்கு உண்மையாகவே நடக்கிறார்களாவென்று பார்ப்போம்’, என Mr. லாயிட் ஜார்ஜ் தலையை ஆட்டியிருக்கின்றார்! நாமும் எல்லாவற்றையும் சீக்கிரத்தில் பார்க்கப்போகிறோம். இங்கிலண்டிலிருந்து பிரிடிஷ் கவர்மெண்டார் நமது நடத்தைகளையும் கவனித்து வருகிறார்கள்! இந்தியர்களான நாம் அவர்களுக்கு எவ்விதத்திலும் அதிருப்தியைச் செய்யாமலுமிருக்கவேண்டும்! இந்தியாவுக்கு ஸ்வராஜ்யமா கிடைக்கப்போகின்றது? பிரிடிஷ் பிரதம மந்திரியாகிய Mr. லாயிட் ஜார்ஜ், ‘ஆகட்டும்,—பார்ப்போம்,’ என்றே சொல்லியிருக்கிறார்! பார்க்கவாவது, கொடுப்பதாவது? நாம் ஒன்றையும் நம்பவில்லை.

“தர்மத்தைக் கைவிடுவதா?”

“எப்படியும் இந்தியாவில் நமது தர்மத்தை நாம் நடத்தவேவேண்டும். அதை நாம் ஒருபோதும் கைவிடமாட்டோம். மேலும் தர்மபரிபாலனத்திற் கண்ணுள்ளவர்களாக நாம் எதற்கும் அஞ்சாதவர்களென்பதை எல்லோரும் ஞாபகத்தில் வைத்திருக்கட்டும். இந்தியர்களின் நிமித்தம் நாம் வகித்துவரும் கடமை எவ்வளவு பெரியதாயிருக்கின்றது! அக்கடமையை முழுவதும் செலுத்த மனமில்லாதவர்களாயிருந்தால், பின்பு நாம் அத்தேசத்திற்குப் போகாமலே இருந்திருக்கலாமல்லவா? * * * * நமது ஆளுகைக்குள் இந்தியாவும் வந்ததற்குமுன், அந்நாட்டில் எல்லாம் சீர்குலைந்து கிடந்தது. இத்தருணத்தில் பிரிடிஷ் ஜனங்களனைவரும் இந்தியாவிலிருந்து திரும்பவும் வந்துவிடுவார்களேயாகில், அத்தேசம் முன்னிருந்த நிலைமையிலேயே மறுபடியும் தள்ளப்பட்டுவிடும். உண்மையாய் நாம் அவ்வாறு நடப்பது மகாபாதகமாகும்; (அப்பாபத்திற்குப் பிராயச்சித்தமே இல்லை). நம்முடைய ஆதீனத்தில் இருந்துவரும் இந்தியர்களோடு மாத்திரம் நமது பொறுப்பும் நின்றுவிட்டதா? இந்தியாவிலிருக்கும் ஹைதராபாத், பரோடா, மைசூர் முதலிய சமஸ்தானங்களில் ராஜ்யபாரம் வகித்துவருகின்ற மன்னர்கள் விஷயத்திலும் நமது கடமை அபாரமாக இருக்கின்றது. ஐரோப்பிய மகாயுத்தமென்னும் ஓர் பிரமாதமான கண்டத்தில், இந்திய அரசர்கள் நமக்குச் செய்திருக்கும் உபகாரத்தை நாம் மறப்பது தர்மமா? இப்பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தைக் காப்பதற்காக, இவ்வரசர்களும், மற்றும் இந்தியாவிலுள்ள எல்லா ஜனங்களும் நமக்குதவிசெய்ததை என்றைக்கும் கொண்டாடப்படும்.”———Mr. லாயிட் ஜார்ஜ் இந்தியர்கள் சம்பந்தமாகத் தனது தர்மத்தை எப்பொழுதும் நடத்தத் தீர்மானித்திருக்கின்றார்! அவருடைய கருணைக்கும் இந்தியர்களே பாத்திரமாயிருக்கிறார்களெனில், இதைக் காட்டிலும் அவர்களுக்கு அதிருஷ்டமும் உண்டோ! ஆகா, இந்தியாவைப்பற்றி அவருக்கிருக்கும் சிரத்தையை நாம் எவ்வாறு வருணிப்பது? தர்ம ஸம்ஸ்தாபனத்திற்காக பகவான் இவ்வருஷம் அவதரிப்பதற்கும் முன், இதோ மற்றொரு கிருஷ்ணனும் பிறந்துவிட்டார்! இருந்தாலும், Mr. லாயிட் ஜார்ஜின் முன்யோசனை யாருக்குத்தான் வரும்?

ஒன்றுக்கொன்று பொருந்தவில்லை.

இப்படி பிரிடிஷ் பார்லிமெண்டில் இந்தியா சம்பந்தமாய் வெகு சமீபத்தில் நடந்திருக்குமோர் விவாதத்தில், பிரதம மந்திரியான Mr. லாயிட் ஜார்ஜ் இங்கே யிருக்கின்ற ஜனங்களை பிரிடிஷார் எப்பொழுதும் காப்பாற்றிவருவதே தர்மமாகுமென இடக்குடன் பேசியிருக்கின்றார். இந்தியர்களுக்கென்று பிரிடிஷ் ஜனங்களையே ‘கார்டியன்களாகவும்’ ஆதியில் ஆண்டவன் படைத்துவிட்டார் போலும்! இந்தியாவுக்குரிய ஸ்வய ஆக்ஷி ஸ்வாதீனத்தை நாடுபவர்களுக்கும், மற்றும் கோடிக்கணக்கான இந்திய ஜனங்களுக்கும் கவர்மெண்டார் வெகுகாலமாகவே, மிக்கக் கபடத்துடன் வித்தியாசங்கள் பாராட்டிவந்திருப்பதை நாம் வற்புறுத்த விரும்புகிறோம். கல்வியில் தேர்ந்து, தேசவிசுவாசமென்னும் தாபத்தால் ஜ்வலிக்கின்றவர்களாய், நமது தேசத்தின் நிமித்தம் ஓயாது உழைத்தவர்களை பிரிடிஷ் மந்திரிகள் எப்பொழுதாவது ஒத்துக்கொண்டதும் உண்டோ? படித்தவர்கள் வேறு என்றும், மேலும் ஜனங்களின் க்ஷேமத்தை மனப்பூர்வமாக அவர்கள் கோருவதில்லையென்றும் கவர்மெண்டார் நம்மை இதுகாறும் பொம்மைகளாய் ஆட்டிவைத்திருக்கின்றனர். இப்போது Mr. லாயிட்ஜார்ஜ் அதே ஆலாபனத்தைத்தான் செய்கின்றார். கவர்னர் ஜெனரலுடைய நிர்வாக சபையில் உத்தியோகங்கள் வகிக்கவும், இன்னும் லார்ட் ஸின்ஹாவைப்போல் கவர்னரது ஸ்தானத்திலும் இருக்கவும் இந்தியர்கள் சமர்த்தர்களாயிருக்கும்பொழுது, இம்முப்பதுகோடி ஜனங்களுடைய லாபலோபங்களையும் நாம் அறியாமலேயே, இவ்வாங்கிலேயர்களோ நம்மைக்காட்டிலும் நன்றாய் அறிந்துவிட்டனர்! இந்தியாவிலுள்ள இத்திரளற்றவர்களை ரக்ஷிப்பதற்காகத்தான் பிரிடிஷ் ஜனங்கள் இவ்வாறு நடமாடியும் வருகின்றார்கள்! Mr. லாயிட் ஜார்ஜ் சற்று நிதானத்துடன் பேசியிருக்கலாம். ஆயின், அக்காமன்ஸ் ஸபையிலிருக்கும் கன்ஸர்வேடிவ் கக்ஷியாருடைய தாளத்திற்குத் தகுந்தாற்போல், கூத்தாடுவதில் அவரது நிதானம் தவறிவிட்டது. மேலும் அவருடைய வார்த்தைகளை ஆராய்ந்து பார்ப்போம்.

“இப்பொறுப்பை ஏற்றுக்கொண்டு, நமது பெருங்கடமையைச் செய்து முடிப்பதில் இந்தியர்களுக்கும் ஓர் பாகத்தைக்கொடுத்து, அவர்களை நாம் கௌரவப்படுத்தியிருக்கின்றோம். ராஜ்ய பாரம் வகிக்கும் விஷயத்தில், இந்தியர்களையும் நாம் அதிகமாகவே நம்முடன் சேர்த்துவந்திருப்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள். அது முற்றிலும் அவசியமாயிற்று. ஜட்ஜ்களாகவும்,

போர்வீரர்களாகவும், ஸிவில் உத்தியோகஸ்தர்களாகவும் இந்தியர்களை நாம் மேன்மேலும் எக்குறைவுமின்றியே நியமித்ததுமுண்டு. தவிர, 'இந்தியா லெஜிஸ்லேடிவ் அஸெம்பளி' யென்னும் ஓர் சபையை ஸ்தாபித்து, அதிலுள்ள மெம்பர்களுக்கும் ராஜாங்க வியவகாரங்களில் பெருத்த அதிகாரத்தை அளித்திருக்கிறோம். அதுவும் முற்றும் அவசியமாயிற்று. ஆகிலும் இந்தியாவின் மீது நமக்குள்ள பற்றுதலை நாம் ஒருபோதும் விடுவதற்கெண்ணவில்லை. இந்தியர்களையும் தூரத்தில் நாம் ஒதுக்கியே வைக்காது, நம்முடனும் ஒத்துழைக்க சேர்த்துக்கொண்டோம். ஆயின் நமது கடமையை அவர்களிடம் முழுமையும் ஒப்புவிக்க நாம் ஸ்வப்னத்திலும் நினைத்ததில்லையென்பது நிச்சயமே. * * * * * *

இந்தியாவில் எக்காலத்திலும் பிரிடிஷ் உத்தியோகஸ்தர்கள் இருக்கத்தான் வேண்டும். (அவர்களில்லாவிட்டால் இந்தியாவின் முன்னேற்றம் ஒருபோதும் சாத்தியமில்லை) * * * *

2500 பிரிடிஷ் உத்தியோகஸ்தர்கள் எவ்வளவு சாமர்த்தியத்துடன் 31 கோடி இந்தியர்களை ஆண்டு வந்திருக்கின்றனர்! இவ்வுலகத்தின்கண் எத்தேசத்திலாவது இம்மாதிரியான ஆச்சரியமும் காணப்பட்டதுண்டோ ?"———ஏறக்குறைய மூவாயிரம் பிரிடிஷ் சிம்மங்கள் நம்மை எளிதாகவே அடக்கியிருக்கிறார்களாயின் அவர்களைப் போல நாமும் தீரர்களல்லவென்பது தெளிவாய் விளங்குகின்றது. இது கிடக்கட்டும். இத்தேசத்தில் நமக்கு ராஜாங்க விஷயங்களில் மேன்மேலும் அதிகாரமும் கொடுத்து வருவதாய் Mr. லாயிட் ஜார்ஜ் பேசுகின்றார். இந்தியாவுக்குரிய ஸ்வய ஆக்ஷி ஸ்வாதீனத்திற்கும், மேலும் பிரிடிஷ் உத்தியோகஸ்தர்களை இந்தியாவிலேயே நாம் என்றைக்கும் வைத்துக்கொள்வது முக்கியமென்பதற்கும் என்ன பொருத்தம் காணப்படக்கூடும்?

"ஜாக்கிரதையாயிருங்கள்!"

இவ்வாறு Mr. லாயிட் ஜார்ஜ் இந்தியர்களையும் ராஜாங்கவிஷயங்களில் தான் சேர்த்துக்கொண்டதற்காக அவர்கள் நிரம்பவும் திருப்தியடையவேண்டுமென்றும், மேலும் பிரிடிஷ் மந்திரிகளுக்கு எந்நாளும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டவர்களென்றும் கூறியிருக்கிறார். ஸ்வராஜ்ய ஸ்வதந்திரத்தை நாம் அபேக்ஷித்து நிற்கையில், இப்பிரிடிஷ் பிரதமமந்திரியார் இவ்விந்தியாவில் ஆங்கிலேயர்களே எப்பொழுதும் யஜமானர்களாயிருக்கவேண்டுமெனச் சொல்லியிருப்பது பொருந்தவில்லை. தவிரவும் பின்வருமாறு அவர் பேசியிருப்பதையும் கவனியுங்கள்:—

"இனிமேல் தான் இந்தியாவில் ஓர் பெரிய கண்டம் வரப்போகின்றது. சென்ற எலெக்ஷனில் மிகவும் செல்வாக்குள்ளவர்கள் பலர் கொஞ்சமும் சேராமல் ஒதுங்கியே நின்று விட்டார்கள். * * * * * மறுபடியும் பதினெட்டு மாதத்திற்குள் அடுத்த எலெக்ஷன் வந்துவிடும். அதில் மகாத்மா காந்தி கக்ஷியைச் சேர்ந்தவர்கள் என்ன செய்வார்களென்பதை நாம் ஒருவரும் எதிர்பார்க்க முடியவில்லை. அடுத்த எலெக்ஷன் முடிந்ததும், இந்தியாவிலுள்ள சட்டசபைகளில் வந்து உட்காரும் மெம்பர்களேயெல்லாம் முற்றும் பொருத்தகாய் இருக்கின்றது. இப்பொழுது லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில்களிலிருப்பவர்களைப்போலவே, இனிமேலும் வரப்போகும் மெம்பர்கள் இந்தியாகவர்மெண்டாருக்கு எவ்விதத்திலும் இடையூறுகள் உண்டாக்காமலே இருப்பார்களா? அதையும் நாம் பார்க்கவேண்டும். சட்டசபைகளில் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டப் பிரதிநிதிகள் ஆங்கிலேயர்களுக்கு விரோதமாகவே இருந்தால், அப்போது இந்தியாவில் ஓர் கண்டம் நிச்சயமாய் சம்பவிக்கும். நாம் அதை மறக்கவில்லை. என்ன தான் நேரிடினும் இந்தியா சம்பந்தமாய் நம்முடைய பொறுப்பை நாம் வகித்தே தீருவோம். இங்கிலண்டில், லிபரல்களாகிலும், கன்ஸர்வெடிவ் அல்லது லேபர் மெம்பர்களாயினும், இப்பிரிடிஷ் ராஜ்யத்தை நடத்திவருபவர்கள் எல்லோரும் இந்தியாவைக் கைவிடமாட்டார்கள். நமது கடமையைச் செலுத்த நாம் ஒருபோதும் பின்வாங்கமாட்டோம். இங்கிலாண்டிலும், இந்தியாவிலும் இவ்விஷயத்தை யாரும் மனதில் பதித்து வைத்திருப்பார்களென்று எண்ணுகின்றேன்."—இங்ஙனந்தான் Mr. லாயிட் ஜார்ஜ் நம்மை பயமுறுத்தியிருக்கின்றார். Pandit. மோதிலால் நேரு, C. R. தாஸ் முதலியவர்கள் அடுத்த எலெக்ஷனில் சேர்ந்து வெற்றியடைந்தும், கௌன்ஸில்களில் வருவார்களேயாகில், பின்பு அவர்கள் எப்படி நடக்கவேண்டுமென்றே பிரிடிஷ் பிரதம மந்திரியார் முன் எச்சரிக்கை செய்துவிட்டார். அது அவருடைய சாதுரியத்தையே காண்பிப்பதல்லவா? சைனியச் செலவு முதலான விஷயங்களில், அடுத்த சட்டசபைகளில் வரும் மெம்பர்களெல்லோரும் சிறிதும் கோடாமலே இந்தியா கவர்மெண்டாரோடு எதிர்த்து வாதிப்பார்களாயின், பிறகு என்ன நேரிடக்கூடும்? அதைத்தான் Mr. லாயிட் ஜார்ஜ் கபடமின்றியே இப்பொழுது சொல்லிவிட்டார். எங்கும் ஜனப்பிரதிநிதிகள் பிரிடிஷ் அதிகாரிகளின் நோக்கத்தை அனுஸரித்து நடக்கவேண்டும்! இல்லாவிடில் நாம் அனைவரும் ஆங்கிலேயர்களுக்குச் சத்துருக்கள் ஆவோம்!

மட்டந்தட்டிவிட்டார்!

இந்தியா லெஜிஸ்லேடிவ் அஸெம்ப்ளி மெம்பர்களைப்பற்றியும் ஓரிடத்தில் Mr. லாயிட்ஜார்ஜ் பேசியிருப்பதை நமது அன்பர்கள் நன்றாகப் படிக்க வேண்டும். அவர் சொல்வதாவது:—

" அஸெம்ப்ளியிலுள்ள மெம்பர்கள் வெகு லக்ஷணமான பாஷையில், உபன்னியாசங்கள் செய்வது மாத்திரம் பற்றமாட்டாது. * * * *

ஸிவில் உத்தியோகஸ்தர்களாகவும் இந்தியர்கள் சகல காரியங்களையும் பிரதிதினமும் ஒழுங்காய்ச் செய்து முடிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். தாங்கள் கௌன்ஸில்களில் பேசியவை எல்லாம் பத்திரிகைகளிலும் வெளிவருவதைப்பார்த்து, அதுதான் ராஜ்யபாரமென்னும் பொறுப்பையும் வகிப்பதென்று எண்ணிவிடுகிறார்கள். * * * *

ராஜாங்க முறைகளில் பேசுவதென்பது ஓரல்ப விஷயமே ஒழிய, வேறு ஒன்றுமில்லை. சட்டசபைகளில் பிரசங்கம் செய்வதுடனும், இந்தியர்கள் ஸிவில் உத்தியோகஸ்தர்களாகவும் ராஜ்ய நிருவாகத்தைக் கற்றுக்கொள்ளாவிட்டால், அவர்களுக்கு ஸ்வய ஆக்ஷி ஸ்வாதீனத்தைக் கொடுப்பது எங்ஙனம்? ஏனெனில் நாம் அதை அளிப்பது அப்பொழுது முற்றிலும் தவறாகவே முடிந்துவிடும்."—இந்தியா லெஜிஸ்லேடிவ் அஸெம்ப்ளியில் ஓயாது பேசிவந்தவர்களுக்கு Mr. லாயிட் ஜார்ஜ் கடைசியில் நல்ல வெகுமானம் செய்திருக்கின்றார்! சட்ட சபைகளில் உழைத்தே தாங்கள்

விரும்பிய ஸ்வாராஜ்ய சுதந்திரத்தை யடைந்துவிடலாமென்று நமது மெம்பர்கள் இதுகாறும் நினைத்துவந்தார்கள்; ஆயின் அவர்களுக்குக் கிடைத்த பலன் இதுதான்!

இந்திய வாலிபர்கள்.

ஸர். மரேஹாமிக் என்பவர் இம்மாகாணத்தில் மிகவும் உயர்ந்த உத்தியோகங்களை வகித்தும், மேலும் கவர்னராகவும் கொஞ்சகாலம் கௌரவமடைந்தும் வந்திருக்கின்றார். லண்டனிலுள்ள இந்தியா கௌன்ஸிலில் பலவருஷமாக ஓர் மெம்பராகவும் இருந்துவிட்டு, வெகு சமீபத்தில்தான் தனது வேலையிலிருந்தும் விலகியிருக்கிறார். வயது காலத்தில் சௌக்கியமாய் இருக்க எண்ணியே இவர் இவ்வுலக வியவகாரங்களிலிருந்து ஒதுங்குவதற்காகப் புறப்படும் முன், ஸர். வில்யம் மேயர் முதலானவர்கள் இவருக்கோர் விருந்தளித்தார்கள். அப்போது இவர் சொன்னதாவது:--"திக்கும் திசையுமின்றியே, இங்கிலண்டில் பரிதவித்து நிற்கும் இந்திய வாலிபர்களுக்கு உதவிசெய்வதற்காக லண்டனில் ஒரு கமிட்டியை ஸ்தாபித்திருக்கிறார்கள். அதில் நான் சேர்மனாக இருக்கும்போது, இந்திய வாலிபர்கள், கையில் ஒரு காசுகூடவும் இல்லாமலும், எவ்வளவு தைரியத்தோடும், விடாமுயற்சியோடும், பௌருஷத்தோடும் நடந்திருக்கிறார்களென்பதை யறிந்து, நான் வியந்திருக்கின்றேன். அவர்களுடைய ஸ்திதியில், பிரிடிஷ் சிறுவர்களும் தங்கள் நாட்டிலிருந்து ஆறாயிரம் மைலுக்கப்பால் வேறொரு தேசத்தில் அவர்களைப்போலவே கஷ்டப்பட்டிருந்தார்களேயாகில், அப்பிரிடிஷ் வாலிபர்கள் முற்றும் மடிந்திருப்பார்கள். நானும் முப்பதுவருஷமாக இந்தியர்களோடு பழகியிருக்கிறேன்; மேலும் அவர்களைப் பற்றியும் எவ்வளவோ கவனித்தும் வந்திருக்கின்றேன். ஆயினும், இந்தியர்களைப்போல, கஷ்டகாலத்தில், எவரும் தீரத்துடன் சமாளித்து வருவது சாத்தியமில்லை. ஆபத்துக்காலங்களில், என்னுடைய கமிட்டியால் நன்மையடைந்திருக்கும் இந்திய வாலிபர்கள் எவ்வளவாக செய்நன்றியும் பாராட்டியே வந்திருக்கிறார்கள்!"

இவை ஸர். மரே ஹாமிக் வார்த்தைகளாகும். I. C. S. இல் உத்தியோகம் வகித்து, சென்னையில் கவர்னரது பதவியிலும் சிலமாதம் இருந்திருக்கின்றார். இந்திய வாலிபர்களைப்பற்றி இவ்வாறு இவர் கூறியிருப்பதும் மிக்க ஆனந்தத்தை நமக்குண்டாக்குகின்றது. இங்கிலண்டைப் போலொத்த இதரதேசங்களில் நாம் இருக்கும் பொழுதுதான், மிகவும் ஜாக்கிரதையாகவும் நடக்கவேண்டும். தாய் தந்தையர்களை விட்டுவிட்டு, ஓர் அன்னியநாட்டில், வறுமையிலும் துன்பத்திலும், இப்படி நமது வாலிபர்கள் மிகவும் உண்மையாய் இருந்திருப்பது இந்தியாவுக்கே மிகுந்த பெருமையைத் தருவதாகும். பிரிடிஷ் ஜனங்களைப் போன்றவர்களும் பார்த்து வியக்கும்படியாய், இவ்வாறு நடந்ததற்காக, நமது சிறுவர்களை நாம் கொண்டாடுவது மன்றியில், அவர்களுக்கு மிகக்களிப்புடன் வந்தனமும் செலுத்துகின்றோம். ஸர் மரே ஹாமிக் மனப்பூர்வமாகத்தான் இதைச்சொல்லியிருக்கவும் வேண்டும். இந்தியர்களைப்பற்றி எப்பொழுதும் தூறியேவருபவர்கள் இவருடைய அபிப்பிராயத்தை மனதில் வைத்திருக்கட்டும்.

விடுதலை யடைந்தார்

இம்மாதம் 9ம்தேதி புதன்கிழமை ராத்திரி 8-20க்கு பாபுசித்தரஞ்சன தாஸும், பாபு B. N. ஸாஸ்மலும் சிறையிலிருந்து விடப்பட்டார்கள். ஜெயிலிலிருக்கும்போது தான் நிரம்பவும் மரியாதையுடன் நடத்தப்பட்டதாகவே பாபு. C. R. தாஸ் தெரிவித்தார். மேலும் தான் திரும்பவும் வக்கீலாகப் பணம் சம்பாதிக்க நினைக்கவில்லையென்றும் சொன்னார். Mr. தாஸ் கொஞ்சமும் உத்சாசக்குறைவின்றியே இருப்பதாய் அறிவிக்கப்படுகின்றது. 'சட்ட மறுப்புக்கமிட்டி' மெம்பர்களெல்லோரும் அவரைப் போய்ப்பார்த்து, இக்ஷணத்தில் இந்தியாவில் தாம் செய்யவேண்டியவைகளைப்பற்றியும் அவருடன் கலந்து ஆலோசித்தார்கள்.

பங்காளத்தில் பாபு சித்தரஞ்சன் தாஸைக்காட்டிலும் மகாத்மாவின் காரியத்தை ஸாதிப்பதற்குச் சக்தியுள்ளவர்கள் ஒருவருமில்லை. H.R.H. வேல்ஸ் இளவரசர் பம்பாயில் வந்து இறங்கியபோது, கல்கத்தா நகரத்தில் மகாத்மா காந்தியுடைய ஆணைகளைச் செய்து முடித்தவர் அவர்தான். அப்பொழுது அவரது செல்வாக்கைக்கண்டு அஞ்சியே பெங்கால் கவர்மெண்டார் அவரையும் 'அரெஸ்டு' செய்தனர். தனது வக்கீல் தொழிலையும், மேலும் அதில் கிடைத்துவந்த வரும்படியையும் துறந்து, இத்தேசத்தின் நிமித்தம் அபூர்வமான பரித்தியாகமும் செய்திருக்கிறார். இப்போது அவருடைய வார்த்தைகளை எல்லோரும் எதிர்பார்த்து நிற்பதில் ஆச்சரியமில்லை. மகாத்மா காந்தியை சிறையிலிருந்து உடனே விடுவிப்பதற்காகவே நாம் அனைவரும் சிரமமெடுத்துக் கொள்ளவேண்டும். இதை உத்தேசித்துத்தான், பண்டிட். மோதிலால் நேரு முதலியவர்கள் இந்தியாவில் இப்பொழுது சுற்றுப்பிரயாணம் செய்துவருகிறார்கள். மகாத்மா காந்தியை ஜெயிலிலிருந்து விடுவிப்பதே நமது முக்கிய கடமையாகும். பாபு சித்தரஞ்சன தாஸ், பண்டிட். மோதிலால் நேரு முதலானவர்கள் இதற்குத் தகுந்த உபாயங்களைத் தேடுவதில் சிறிதும் தயங்கமாட்டார்கள். Mr. தாஸ் நம்முடன் திரும்பவும் வந்து சேர்ந்ததைப்பற்றி நாம் சந்தோஷமடைகின்றோம். மேலும் அவருக்கு சற்றும் தளராத திடத்தையும் அப்பரம்பொருள் கொடுப்பாராக.

பரம்பரையாண்டிகளா?

டாக்டர் P. C. ராய் என்பவர் ரஸாயன சாஸ்திரத்தில் மிக்கக் கியாதியடைந்தவர். கல்கத்தா யூனிவர்ஸிடி காலேஜில் ப்ரொபஸராக வெகு காலமாயிருந்து வருகின்றார். இவர் 'யங் இந்தியா'வில் பின்வருமாறு எழுதுவதை எல்லோரும் கவனத்துடன் படிக்கவேண்டுமென்று நாம் கேட்டுக்கொள்கிறோம்.

"மகாத்மா காந்தி சொற்படியே, இவ்விந்தியாவில் ஜனங்களெல்லோரும் நூற்று நெய்வதற்குக் கற்றுக்கொள்வதும் அவசியமென நான் எங்கும் முறையிட்டிருக்கின்றேன். நான் அப்படிச் செய்ததற்கென்ன காரணங்களென்று பலர் கேட்டதுண்டு. அவைகளை மறுபடியும் இங்கே சொல்வதற்கும் எனக்கொரு ஆக்ஷேபணையுமில்லை. நூல் நூற்று சம்பாதிப்பதால், வரும்படியும் ஏராளமாக ஆகமாட்டாதென்பது நிஜம்தான். எவ்வளவு சிரமப்பட்டாலும், நான்கணாவுக்குமேல் கிடைத்துவருவது துர்லபமே. ஆகிலும், ஒருவனுக்கு

வேறொரு தொழிலுமில்லாவிட்டால், அவன் நூற்று வருவதால் நன்மையையே அடைவான். ஏழைகளாகிலும், பணக்காரர்களாயினும், எவனும் அன்னவஸ்திரத்திற்காக உழைத்துவந்தால், உலகத்திலுள்ள கஷ்ட நிஷ்டூரங்களை நன்றாய் அறிந்து, பிறருக்கு ஒருவிதத்திலும் தீங்குகள் இழைக்காமலும் இருக்கக் கற்றுக்கொள்வான். இதனால் எல்லோருக்கும் க்ஷேமமே உண்டாகும். இக்காரணத்தைக் கொண்டே அனைவரும் நூல் நூற்று நெய்யவேண்டுமென்று நான் சொல்லியிருக்கின்றேன். இருந்தாலும், இவ்விஷயத்தைப் பற்றி நான் இங்கே விஸ்தாரமாகப் பேச எண்ணவில்லை. 'சர்கா' என்பது ஏழை ஜனங்களுக்கு மிக்கப் பிரயோஜனமுள்ளதாய் இருக்குமென்பதில் எனக்கு எப்பொழுதும் சந்தேகமே கிடையாது. 'நூற்று நெய்வதால் லாபம் கிடைக்குமென்றே வைத்துக் கொள்வோம்; பிறகு அத்தொழிலையும் கைக்கொண்டு ஊக்கமாக நடத்தக் கூடியவர்கள் யார்?', எனக் கேட்கப்படலாம். இக்கேள்வியும் ஏன் பிறக்கவேண்டும்? கொஞ்சகாலத்திற்கு முன் இந்தியாவில் எண்ணிக்கையற்ற ஜனங்கள் நூல் நூற்றும், துணிகள் நெய்தும் பிழைத்து வரவில்லையா? பின்பு அவர்களெல்லோரும் 'சர்கா'வைக் கையில் எடுத்துக்கொள்வதற்கு என்ன தடைகளிருக்கின்றன?"

"1800ம் வருஷத்தில், கம்பெனியாருடைய ராஜ்யத்தில், இவ்விந்தியாவில் கவர்னர் ஜெனரலாக இருந்துவந்த லார்ட் வெல்ஸ்லி உத்தரவிட்டபடி, டாக்டர். புகானன் என்பவர் சில விசாரணைகள் செய்தும், மேலும் அவைகளைக் குறித்தும் வைத்திருக்கின்றார். அப்போது பீகார் மாகாணத்தில் நூற்று நெய்து வந்தவர்கள் நிரம்பவும் அதிகமாகவே காணப்பட்டார்களாம். 3,30426, ஸ்திரீகள் மாத்திரம், ஒவ்வொரு நாள் சாயந்திரமும் சொல்பநேரம், நூற்று வந்தார்களெனத் தெரிய வருகின்றது. இத்தொழிலைக் கொண்டு அவர்கள் அனைவரும் வருஷத்திற்கு ருபாய் 10,81005 லாபமடைந்து வந்ததாகவும் டாக்டர்.புகானன் எழுதியிருக்கிறார். ஷாஹாபாதில் 1,59500 ஸ்திரீகளும் ஒவ்வொரு வருஷமும் 12,50000 ரூபாய் மதிப்புள்ள நூல் நூற்று விற்றிருக்கிறார்கள். பகல்பூரில் 1,60000 ஸ்திரீகள் இத்தொழிலில் வருஷமொன்றுக்கு 7,20,000ரூபாய் சம்பாதித்துவந்ததாகவும் ஏற்படுகின்றது. கோரக்பூரிலும் 1,75600 ஸ்திரீகள் ஒவ்வொருவருஷமும் 4,39000 ரூபாய், சகல செலவுகளும்போக, அடைந்திருக்கின்றனர். டினாஜ்பூரில் மாத்திரம் 9,15000 ரூபாய் பிரதி வருஷமும் கிடைத்து வந்ததுண்டு. ஆகவே இவ்வைந்து ஜில்லாக்களிலும் நூறு வருஷத்திற்குமுன் முப்பத்தைந்து லக்ஷ ரூபாய் வருஷந்தோறும் ஸ்திரீகள் லாபமடைந்திருக்கிறார்கள். இக்காலத்திய மதிப்பில் இவ்வரும்படி இரண்டு கோடிக்கு மேலும் இருக்கும். தங்களுடைய பொழுதை வீணாக்காமல், பிரதி தினமும் சிலநேரம் நூற்றுவருவதால் இவ்விரண்டு கோடி ரூபாய் கிடைத்துவந்தது. இப்பொழுதும் தான் ஏன் அவ்வாறு நமது ஸ்திரீகள் உழைக்க முடியாமலே இருக்கவேண்டும்?"

"இப்பொழுது நாம் 'சர்கா'வை தூரத்தள்ளி விட்டதற்குக் காரணங்களென்ன? நூல் நூற்பதைப்பார்க்கிலும் ஏதாவது ஒரு உயர்ந்த தொழிலில் முன்னிலும் ஏராளமாய் சம்பாதித்து சௌக்கியத்துடனே நமது ஜனங்கள் காலத்தைக்கழிக்கின்றார்களா? அப்படி ஒன்றுமில்லை. வேறொரு ராஜாங்கத்தார் இத்தேசத்தில் வந்து அடம் செய்ததுதான் காரணமாயிருக்கின்றது. கம்பெனியாருடைய ராஜ்யத்தில், கவர்ன்மெண்டார் இங்கிலண்டின் லாபத்திற்காகவே இந்தியாவை முற்றும் உபயோகித்து வந்தார்கள். பிரிடிஷ் வியாபாரத்திற்காக இந்தியாவிலிருந்த கைத்தொழில்களெல்லாம் முற்றிலும் நசிக்கும்படி நேரிட்டது,"—இவ்வாறு டாக்டர். P. C. ராய் 'யங்இந்தியா'வில் மேன்மேலும் விஸ்தாரமாய் எழுதுகின்றார். இங்கிலண்டில் மான்செஸ்டர் முதலான இடங்களில் வியாபாரம் செழித்துவருவதற்காகவே, நமது தேசத்தில் மிகவும் தேர்ச்சி அடைந்த கைத்தொழிலாளிகளின் பிழைப்பைச் சிறிதும் இரக்கமில்லாமலே கவர்ன்மெண்டார் நசுக்கி விட்டார்களென்று மார்டின் என்பவர் 1838இல் ரெகார்டுமூலமாக எழுதிவைத்துவிட்டார். தவிர, 1858இல் வில்ஸன் என்னும் சரித்திரக்காரரும் இதைத்தான் தெளிவாய்ச் சொல்லியிருக்கின்றாரென்று டாக்டர் P.C. ராய் எடுத்துரைத்திருக்கிறார். தமது கைத்தொழில்களையும், மேலும் அவைகளால் தமக்குக் கிடைத்துவந்த ஜீவனத்தையும் இழந்து, கோடிக்கணக்கான இந்தியர்கள் நிலத்தை உழுது கிருஷி செய்தே வயிறுவளர்க்க ஆரம்பித்தனர். இத்துடன் வேறு ஒருவழியும் இல்லாததால், பஞ்சகாலத்தில் இவ்விந்தியாவில் எண்ணிக்கையற்றவர்கள் ஆகாரமென்பதின்றி முழுவதும் பரிதாபப்படத்தக்க நிலைமையில் கிடந்து வருந்துகின்றார்கள். இக்கஷ்டத்திலிருந்து அவர்களை விடுவிப்பதற்காகவே மகாத்மாவான காந்தி 'சர்கா' என்னுமோர் உபாயத்தை உபதேசித்தார். டாக்டர் P. C. ராயும் இவ்விஷயத்தைத்தான் ஜனங்களின் மனதில் படும்படியாக 'யங் இந்தியா'விலும் இப்பொழுது எழுதும்படி நேர்ந்தது. இந்தியர்கள் பரம்பரை ஆண்டிகளல்ல. அவர்களுடைய தேசத்தில் அவர்களுக்குக் கொஞ்சமேனும் ஸ்வாதீனம் என்பது இல்லாததாலேயே இப்படிப்பட்ட துன்பங்களை இந்தியர்கள் அனுபவிக்க வேண்டியதாக இருக்கின்றது. "அர்த்த சாஸ்திரத்தில் நான் மகாநிபுணன் இல்லை. ஆகிலும், பசியால் துடிதுடிக்கும் குழந்தைகளும் எவ்வாறு தாய்ப்பாலைத்தாமாகவே தேடுகின்றனவோ, அப்படியே இவ்வறுமையால் மெலிந்து உருகும் இந்தியர்களுக்கு அவர்கள் நூற்று நெய்வதின் லாபத்தையும் காண்பிக்க ஆவலுள்ளவனாயிருக்கின்றேன்."—இவ்வாறு எழுதுவதென்றால், ஒருவனுக்கெவ்வளவு தேசவிசுவாசமும் இருத்தல்வேண்டும்! டாக்டர் P. C. ராய் மிகவும் உண்மையாயிருப்பவர்; பெயர் பெற்ற லோகோபகாரி; காணக்கிடைக்காத பரமார்த்தி. அவருடைய வார்த்தைகளையும் நாம் அலக்ஷியம் செய்து வருவோமா?

ஸர். P. S. சிவஸ்வாமி அய்யர்

ஜினீவாவில் கூடப்போகும் 'லீகாப்நேஷன்ஸ்' என்னும் சபையில், இந்தியா பிரதிநிதியாக ஸர். P.S. சிவஸ்வாமி அய்யர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாய் சமாசாரம் எட்டுகின்றது. அவருடைய போக்கில், அய்யரவர்கள் தேசபக்தியிலும் சிறந்தவரென்று நாம் சொல்லத்தேவையில்லை. அவருக்குக் கிடைக்கும் கௌரவமெல்லாம் நம்முடையதும்தான். நாமனைவரும் பெரும்பாலும் லௌகிகமார்க்கத்தையே அனுசரிப்பவர்களாதலால், அய்யரவர்களைப்பற்றியும் சந்தோஷமடைவதில் பிசகில்லையென்று எண்ணுகின்றோம்.

மரமாம்பழம்.

அறிவிற் சிறந்த வாசஸ்பதியும், அவருடைய அன்புள்ள மனைவி மந்தாகினியும், நிசியில் பேசிக்கொண்டிருந்த சமாசாரங்கள் தற்செயலாய் என் காதில் பட்டன. அவைகளைக் கேட்ட பாபத்தை முழுவதும் தாங்க நான் சக்தியற்றவனாகையால், அதைப் பலருடனும் பங்கிட்டுக்கொள்ள எண்ணி, இங்கு வெளிப்படுத்துகிறேன்.

வாசஸ்பதி—“என் மனதிற் கிசைந்த மங்கையே, நம் வீட்டில் அழுகையும், கூச்சலும் வரவர அதிகரித்துக்கொண்டு வருகிறதே;—இதைத் தடுக்க உன்னால் முடியவில்லையா? இதுவரையிலும் இருந்ததைப் பார்க்கிலும் அதிகக் கூக்குரலுக்குக் காரணம் என்ன?”

மந்தாகினி—“நான் தங்களுடைய காதில் இவைகள் படாமலிருக்கவேண்டி, அநேக உபாயங்கள் செய்து வந்தேன். குழந்தைகள் அழும்போதெல்லாம், அவைகளுக்குத் தாங்கள் மாம்பழம் வாங்கிவரப்போகிறதாகச் சொல்லி ஸமாதானம் செய்து வந்தேன். மாம்பழத்தின் காலம் இன்னம் வரவில்லையென்றும், அவைகள் வந்தாலும் தின்பதற்குக் குழந்தைகளுக்குப் பல் முளைக்கவில்லையென்றும் சொல்லிக்கொண்டிருந்தேன். இப்படியிருக்க, சில குழந்தைகளுக்குப் பல் முளைத்தவுடன், இப்பழத்தின் ஞாபகம் பலமாகி, அழ ஆரம்பித்தன. அவைகளை, மற்றக் குழந்தைகளுக்குப் பல் இல்லாமையினால், பழத்தைப் பல்லுள்ளவர்கள் தின்னும் காலத்தில் மற்றவர்கள் விசனமடைவார்கள்,—அது சரியல்ல,—வென்று சமாதானப் படுத்தினேன். கொஞ்சம் நாள் கழிந்தவுடன், மற்றைய குழந்தைகளுக்குப் பல் முளைத்துவிட்டதைக் கண்டு, மறுபடியும் பழப் பிரஸ்தாபம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். நான் தாங்கள், கோபம் வந்தால், பிரம்பாலடிப்பீர்களென்று சொல்லிப்பார்த்தேன். கேட்கும் வழிகாணேன். எல்லாக் குழந்தைகளும் சேர்ந்து கத்துவதற்கு ஆரம்பித்துவிட்டன.”

வாசஸ்பதி—“நீ சிறு குழந்தைகளுக்கு மாம்பழம் தின்பது அசௌக்கியத்தை உண்டுபண்ணுமென்று அவைகளுக்குச் சொல்லக் கூடாதா? மாம்பழத்தைக் குழந்தைகளுக்குக் கொடுத்துவிட்டால் நாம் எப்படிப் பிழைக்கிறது? அதுதானே நமக்கு ஆதாரமாயிருக்கின்றது.”

மந்தாகினி—“தாங்களென்ன என்னை அவ்வளவு பேதைமையாக எண்ணிவிட்டீர்கள்? இந்த யுக்தி எனக்குத் தோன்றாமலா இருக்கும்? அதையும் சொல்லிப்பார்த்துவிட்டேன். அவர்களெல்லோரும் நாம் இரகசியமாக மாம்பழத்தைச் சாப்பிடுவதாயும், அதை நாம் அறியாமலே திருடியாவது எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கலந்து பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களில் மூத்தவனாகிய ஏகாந்தன், அவ்வாறு செய்வது தங்கள் நிலைமைக்குத் தகாதென்றும், மற்றும் தகப்பனார் கோபித்தால் தண்டனை பலமாய்விடும்,—அப்பொழுது சிறு குழந்தைகள் அதிகக் கஷ்டப்படுவார்களென்றும்,—அதற்காக மாம்பழம் கிடைக்குமளவும் சாப்பிடாமல் பட்டினியாயிருந்துவிட்டால் தாய் தந்தையர்கள் மனமிரங்கியோ, மற்றும் அயலார் தங்களைத் தூற்றுவார்கள் என்ற பயத்தினாலோ, மாம்பழம் கொடுத்து விடுவார்களென்று சொன்னான். அதற்கு மற்றையோர் அனைவரும் ஒத்துக்கொண்டார்கள்.”

வாசஸ்பதி—“இவ்வளவு தூரம் வந்து விட்டதா? ஏகாந்தன் அதிக யுக்தி நுட்பத்தோடு வேலைசெய்கிறான். அவன் நினைத்தபடி நாம் இரங்கிவிட்டோமானால், நமக்கு உணவில்லாமற்போம். கொடாவிட்டால் கூக்குரல் ஜாஸ்தியாகி, அல்லசலிலுள்ளவர்களுக்கு நம்மிடத்தில் அவமதிப்புண்டாய்விடும். நான் இதுவரையிலும் பிரம்பின் ஒத்தாசையினால் இச்சிறுவர்களை அடக்கிவிடலாமென்று எண்ணியிருந்தேன். அது இனி பலிக்காதென்று தோன்றுகிறது. இதற்கோர் உபாயம் தேடவேண்டியிருக்கிறது. ஏகாந்தன் மிகவும் பிடிவாதமுடையவன் என்பது நமக்கு முன்னமே தெரியும். தன் மனம் கோணினால், பட்டினி கிடப்பது அவன் வழக்கம். இப்பொழுது தன்னோடில்லாமல் மற்றவர்களையும் தன் வழிக்குக் கொண்டுவந்துவிட்டான். என் மனம் கலங்குகிறது. ஒன்றும் தோன்றவில்லையே; என்னசெய்குவேன்?”

மந்தாகினி—“அடாடா, இந்த அல்ப காரியத்திற்காகத் தாங்கள் இவ்வளவு ஆயாஸப்படக் கூடாது. நான் இருக்கையிலேயே இந்த விசாரம் வேண்டுமா? தாங்கள் என்ன சொல்லுகிறீர்களென்று பார்த்தேன். நான் முன்னமே ஒரு ஏற்பாடு செய்திருக்கிறேன். நான் குழந்தைகள் அறியாமல், பொம்மைக் கடையிலிருந்து சில மரமாம்பழங்கள் வாங்கிவைத்திருக்கிறேன். அவைகளை நீங்கள் வாங்கிக்கொண்டு வந்தது போலக் கூடையில் வைத்துக் கொண்டுவந்து கொடுங்கள். கொடுக்குங் காலத்தில் மரமாம்பழமென்று ஏகாந்தன் தெரிந்துகொண்டாலும், மற்றவர்கள் தெரிந்துகொள்ள மாட்டார்கள். அவ்வளவு நன்றாய் வர்ணம் போடப்பட்டிருக்கிறது.”

வாசஸ்பதி—“நல்ல யுக்திதான். ஆனால் ஏகாந்தன் பிறரைக்கலைத்து, இப்பழங்களை வாங்காமலிருக்கச் சொல்லிவிட்டால், என்ன செய்கிறது?”

மந்தாகினி—“அதற்கும் தக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். சிறுவர்களில் மந்தனையும், மகிழனையும் தனியே அழைத்து, சில பழங்கள் தாங்கள் கொடுக்க யத்தனித்திருப்பதாயும், அவைகளை வாங்கித் தின்னாமல் பிறருக்குக் காட்சியாக வைத்து விளையாடிக்கொண்டிருந்தால் பழத்தைக் காப்பாற்றும் சக்தி வந்து விட்டதென்று தெரிந்தவுடன், அதிகமாகப் பழங்களை அவ்விருவருக்கும் மாத்திரம் கொடுப்பதாயும் சொல்லியிருக்கிறேன். அவர்கள் தனியே அம்மரமாம்பழங்களின் அழகைக் கண்டு நாக்கில் நீர்பெருக விட்டுக்கொண்டு சம்மதித்திருக்கிறார்கள். ஆனால் ஏகாந்தனிடத்தில் இவ்வுபாயம் பலிக்கவில்லை.”

வாசஸ்பதி—“ஆமாம். நீ சொல்வதே நல்ல உபாயம். நீ மதிமந்திரியெனத்தகும். இப்படி மரமாம்பழத்தைக் கொடுத்துவிட்டால், அச்சிறுவர்களுக்கு, பழத்தைக் கையில் வைத்து அடிக்கடிப் பழகுவதினால், பழத்தில் அதிக ஆசை வந்து விடாதா? அதை கவனிக்கவில்லையே.”

மந்தாகினி—“அடாடா, என்ன இவ்வளவு சந்தேகம் என்னிடத்தில்? இதை யோசிக்காமலும் இருப்பேனா? அதற்காகத் தானே மண்ணில் செய்யாமல் மரத்தில் செய்தேன். சிறுவர்கள் விளையாட்டாகவாவது கடிக்க யத்தனித்தால், பல் உடைந்து போகும். அதையே காரணமாகச் சொல்லி, பழங்கள் அவர்களுக்கு வைத்துக்கொள்ளத் திறமை போதாதென்று சொல்லி விடலாம். அயல் வீட்டார்களும் நம்மை அவமதியார்கள். இதற்கெல்லாம் ஒரு இடைஞ்சல்தான் இருக்கிறது. அது ஏகாந்தனுடைய புத்தி நுட்பமும், நன்மையுமே. அவைகளைத் தான் மாற்றவேண்டும்.”

வாசஸ்பதி—“நீ சொல்லியபடியே செய்துவிடுவோம்,” என்று சொல்லவும், கோழி கூவிற்று; பேச்சும் நின்றுவிட்டது.

— “ராமசந்திரர்.”

பூவின் மணம்

(The Fragrance of the Flower)

சென்னைமாநகரில் வாழும் நாம் நாட்டுப்புறத்திலிருந்து இங்கு வந்து டிராம் வண்டியையும் மோட்டாரையும் பார்த்துத் திகைக்கும் நமது உறவாளியைப் பரிகாசம் செய்கிறோம். அவனுக்கு விந்தையாகத் தோற்றுவது நமக்கு சாதாரணமாகத் தோற்றுகிறது. தான் முன் பார்த்திராத புதிய பொருள் ஒன்றைக் காணும் பொழுது அவன் பிரமித்து நிற்கிறானென்பது நமக்குச் சிரிப்பாயிருக்கிறது. நாமோ அவ்வாறின்றி, அதிவிந்தையான விஷயங்கள் நம்மைச் சுற்றி நிகழ்ந்தபோதிலும் அவற்றின் விந்தையை உணருவதில்லை. உதாரணமாக மேற்கூறிய டிராம்வண்டி இன்னவிதமாக ஓடுகிறதென்பது நம்முள் எத்தனை பேருக்குத் தெரியும்? அது மிகவும் விந்தையான விஷயமென்பதற்கு என்ன சந்தேகம்? ஊன்றிப் பார்க்கின் நம்மைச் சுற்றி நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியுமே மிகவும் ஆச்சரியகரமானதென்பது தெரியவரும்.

இதற்கு உதாரணமாக, ஒரு சாதாரண நிகழ்ச்சியை எடுத்துக் கொள்ளுவோம். நமது நாட்டில் சூரிய ராஜாவின் தயவால் புஷ்பங்கள் ஏராளமாய்ப் பூக்கின்றன. அவற்றுள், அனேகம் அழகிய நிறங்கள் கொண்டன; அனேகம் நறு மணம் வீசுவன; சில துர் நாற்றம் உள்ளன; வேறு சில நிறமும் மணமும் அற்றன. இதை எல்லாம் நாம் எல்லோரும் அறிவோம். இதற்குள் ஒவ்வொன்றும் ஒரு விந்தை. ஊன்றி நினைக்கும்போது அளவற்ற திகைப்பை உண்டாக்க வல்லது. நாம் இவற்றிலுள்ள விந்தைகளைச் சிறிதும் உணராமல், அழகிய புஷ்பங்களைக் கண்டு களித்தும், நறுமணம் வீசுவனவற்றைப் பறித்துச் சூடியும் வருகிறோம். புஷ்பத்தைத் தலையில் வைத்துக்கொள்ளும்போது, "பூ ஏன் மணக்கிறது?," என்று கேட்கிறோம்? பூமியில் உண்டாக்கப்பட்டதெல்லாம் கடவுளின் செல்லப் பிள்ளையாகிய மனிதனுடைய சுகத்திற்காகத்தான் என்று இறுமாந்து நடந்துவருகிறோம்.

வாஸ்தவத்தில் அப்படித்தானா? எல்லாம்வல்ல கடவுள் நமக்கு இன்பம் தரும்பொருட்டுத்தான் பூவுக்கு மணம் கொடுத்தாரா? அதனால்தான் பூ வாசனையாயிருக்கிறதா? அப்படியானால் துர் நாற்றமுள்ள பூக்களை ஏன் உண்டாக்கினார்? வாசனையே இல்லாத பூக்களும் இருக்கின்றனவே, அவை எதற்காக? பின் உண்மைதான் என்ன?

இவ்விஷயங்களை எல்லாம் ஆராயப்புகுந்த அறிவாளர் தட்டித் தடுமாறிக் கடைசியாக இவற்றைப் பற்றி சில அபிப்பிராயங்கள் கொண்டிருக்கின்றனர். அவற்றை இங்கே சுருக்கமாகக் கூறுகிறேன்.

அவர்கள் முக்கியமாய் இரண்டு விஷயங்களை ஆராய்ந்தார்கள். பூ என்ன காரணத்தால் மணக்கிறது என்பது ஒன்று; பூ அவ்வாறு மணப்பது எதற்காக என்பது இரண்டு.

பூவின் மணத்துக்குக் (அல்லது நாற்றத்துக்குக்) காரணம் அதிலுள்ள ஒருவகைத் தைலம் அல்லது எண்ணெயே. வாசனையுள்ள ஒவ்வொரு புஷ்பத்திலும் இந்த எண்ணெய் காணப்படுகிறது. இது செடியின்மேலேயே உண்டாக்கப்படுகிறது. ஒவ்வொரு செடியும் ஒவ்வொருவகை எண்ணெய்யை உண்டாக்குகிறது. ஆயினும் இவற்றுள் அதிக வித்தியாசமில்லை. ஒரே இனத்தைச் சேர்ந்த செடிகள் உண்டாக்கும் தைலங்கள் கிட்டத்தட்ட ஒன்றுபோலவே இருக்கின்றன. செடிகளெல்லாம் தைலங்களைக் கூட்டும் முறையும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றது. சுளுக்குகளைப் போக்குவதற்கும் வர்ணங்களைக் கலப்பதற்கும் உபயோகிக்கப்படும் கற்பூரத்தைலம் (Turpentine) என்று சொல்லப்படும் தைலமும் இவ்வாறு ஒருவகைச் செடியினால் உண்டாக்கப்படும் தைலமே. பொதுவாகச் செடிகள் உண்டாக்கும் தைலங்களெல்லாம் அதேமாதிரித்தைலமென்று கூறலாம்.

இந்தத்தைலம் ஒருவகை இரசாயன ஐக்கியப் பொருள் (Compound). இதில் இரண்டே இரண்டு மூலப்பொருள்கள் (Elements) தாம் காணப்படுகின்றன எனினும், அவை வெகு சிக்கலாக ஒன்றோடொன்று சேர்ந்திருக்கின்றன. அவை கார்பன் (Carbon) என்னும் கரிப்பொருளும், ஹைட்ரஜன் (Hydrogen) என்னும் ஜலஜனகவாயுவும். முன்னது கடினம் அல்லது கட்டிப்பொருள் (Solid). பின்னது ஆவி அல்லது காற்றுப் பொருள் (Gas). இதே இரண்டு பொருள்களும் இதே அளவில் வெவ்வேறு விதமாகச் சேர்ந்து வெவ்வேறு ஐக்கியப்பொருள்களை உண்டாக்க வல்லன. அதனால்தான் இவை இதில் சேர்ந்திருக்கிற மாதிரி மிகவும் சிக்கலானதென்று மேலே கூறப்பட்டது.

இவை இரண்டும் சேர்ந்து உண்டாக்கும் தைலங்கள் பெரும்பாலும் எளிதாகவே காற்றால் குடிக்கப்படுகின்றன. அதாவது இந்த ஜாதித் தைலங்கள் இருக்கும் சீசாக்களைத் திறந்து வைத்திருந்தால் கொஞ்ச நேரத்துக்குப் பிறபாடு சீசாவில் துளிகூடத் தைலம் இருக்காது. எல்லாம் காற்றில் பறந்துவிடும். அதாவது இத்தைலங்கள் நிலைத்துத் தைலமாக இராது. எளிதில் ஆவியாக மாறிக் காற்றோடு கலந்தோடி விடுகின்றன. அவை யாவும் காற்றோடிகள் (Volatile Substances).

காற்றில் அப்படிப் பறந்தோடினால் தைலத்தினால் என்ன பிரயோஜனம்? தைலமெல்லாம் வீணாக அல்லவோ போய்விடும்? என்று கேட்கலாம். வாஸ்தவத்தில் அந்தத் தைலம் அப்படி ஆவியாகமாறிக் காற்றில் கலப்பதால்தான் நாம் அதின் வாசனையை உணருகிறோம். தைலம் ஆவியாகிக் காற்றில் கலக்கிறது. தைல ஆவி கலந்த காற்றானது காற்றுலாவும்போது நமது மூக்கில் வந்து படுகிறது. மூக்கிலுள்ள நரம்புகள் ஓர் உணர்ச்சியைப் பெற்று அதை நமது மூளையிடம் தெரிவிக்கின்றன. நமது மூளையும் அது ஒருவகை வாசனை என்னும் உணர்ச்சியை நமக்குத் தருகிறது. நாமும் தைலத்தின் மணத்தை அறிகிறோம்.

பூ மணக்கிறது எதற்காக?, என்பதைப் பற்றி இன்னொரு வியாசத்தில் சொல்லுகிறேன்.

P. N. அப்புஸ்வாமி.

புயற் காற்று.

(இராமேசன் வேலைபார்க்க ஆரம்பித்ததும் அப்போது அந்தபாபுவும் ஹேமநளினியும் அவனை மறுபடி பழைய வீட்டிற்கு வரச்செய்ததும் சென்ற 'தமிழ் உலகு' சஞ்சிகைகளில் சொல்லப்பட்டிருக்கிறது.)

இராமேசன் அதிசீக்கிரத்தில் தான் முன்னிருந்த நிலைக்கு மாறி வந்தான். அவனுக்கும் ஹேமநளினிக்கும் இடையிலுண்டாயிருந்த மனஸ்தாபங்கள் ஒழிந்து போகவே இராமேசன் அந்த பாபுவின் வீட்டில் மறுபடியும் அவர்கள் வீட்டுப் பிள்ளைபோல் பாராட்டப்பட்டு அவர்களுடன் அந்தரங்கமாகப் பழகிப் பரிகசிப்பதும் உத்சாகமாய் பொழுதுபோக்குவதுமாக இருந்தான். ஹேமநளினி புதிய ஊக்கத்தோடு ஓயாமல் படித்துக் கொண்டிருந்ததால் அவள் உடம்பு மிகவும் இளைத்து மெலிந்து இருந்தது; காற்று சற்று பலமாக அடித்தால்கூட அவளுடைய சரீரம் ஒடிந்து விழுந்து விடுமோ என்று இருந்தது. இதுவரை பிறருடன் அதிகம் பேசாமல் படிப்பிலேயே கவனமாய் இருந்ததால் அவள் எங்கே கோபிப்பாளோ, வருத்தப்படுவாளோ என்று அவளுடைய சிநேகிதர்கள்கூட அவளுடன் தைரியமாய் பேசுவதில்லை. ஆனால் இப்போதோ இவை அனைத்தும் முற்றிலும் மாறின. அவளது கபோலங்கள் இரத்தம் செத்து வெளுத்திருந்ததுபோய் மறுபடி அழகுற்று விளங்கின. இப்போது அவள் பேசும்போது கண்கள் கயல்மீன்கள்போல் துள்ளி விளையாடின. ஆடை அணிந்து அலங்கரித்துக்கொள்ளுவதில் காலத்தைச் செலவிடுவது வீண்; அப்படி வீணாய்ப்பொழுதுபோக்குவது பாவம் என்று அவள் எண்ணியிருந்த காலமுமுண்டு. இப்படி அவள் கொண்டிருந்த கொள்கைகளை இப்பொழுது அவள் கைவிட்டதற்குக் காரணம் வெளியாகவில்லை; ஏனெனில் அவள் அந்த ரகசியத்தைப் பற்றி யாரிடமும் பேசவில்லையன்றோ ?

இதுபோல, இராமேசனும் இதுவரை தன் வேலையிலேயே கவனமாய் அதிலேயே ஆழ்ந்திருந்தான்; தான் செய்யவேண்டிய காரியங்களை ஒழுங்காய்ச் செய்யவேண்டும் என்ற கவலையால் அவன் மனம் உல்லாசமற்று இருந்தது. நக்ஷத்திரங்கள் ஆகாயத்தில் சுயேச்சையாக சுழன்று திரிந்தன என்றாலும் அவற்றின் தத்துவத்தை உணர விரும்பும் வான சாஸ்திரி பூதக்கண்ணாடி முதலிய தன்னுடைய யந்திரங்களை பூமியில் கெட்டியாய் கட்டி அமைக்க வேண்டும் அன்றோ? அதுபோல, உலகத்துயிரெல்லாம் மதிமயங்கிச்சுற்றிச்சுழன்றுவர இராமேசன் மட்டும் தத்துவ விசாரணைசெய்து புஸ்தகங்களில் ஆழ்ந்து அசைவற்றிருந்தான். இப்பொழுதோ, அப்படியல்ல; அவனுக்கு இதுவரையிராத புதியதொரு ஊக்கம் உண்டாகி மனமும் விகசிக்கவே உல்லாசமாக இருந்தான்; வேடிக்கை வார்த்தைகளுக்கு உடன் வேடிக்கையாகப் பதில் சொல்லும் சக்தி அவனுக்கு இயற்கையாயில்லையாயினும் சேர்ந்து சிரித்து விளையாடத் தொடங்கினான்; பிறர்போல தலைக்குத் தைலம் தடவி வாரிக்கொள்ள ஆரம்பிக்கவில்லை என்றாலும் உடுக்கும் விஷயத்தில் அவன் இப்போது முன்போல் அவ்வளவு அசிரத்தை பாராட்டுவதில்லை. முன்னிலும் அதிக சுறுசுறுப்புக்கொண்டு பிறருடன் கலகலப்பாய் பழகுபவனாய்க் காணப்பட்டான்.

‘மைக்ரோப்’கள்

ஒவ்வொரு வியாதியும் அதற்கென்று ஈசனால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் மிகச்சிறிதான ஜந்துக்களால் உண்டாகின்றதெனை மேல்நாட்டார் கண்டுபிடித்திருப்பதை எல்லோரும் அறிவார்கள். உதாரணமாக, ‘ப்ளேக்’, ‘டைபாய்ட்’, ‘ந்யுமோன்யா,’ மலேர்யா,’ முதலான ஜ்வரங்களுக்குத் தனித்தனியே சில கிருமிகள் தான் காரணமாயிருக்கின்றன. இவைகளுக்கு ‘மைக்ரோப்’ களென்றும், ‘பாஸில்லை’ யென்றும் நாமகரணம் செய்திருக்கிறார்கள். மனிதர்களின் சரீரத்திற்குள் இம்மாதிரியான ‘மைக்ரோப்’கள் புகுந்து, அவர்களுடையதேக ஆரோக்கியமும் குறையும்போது, இவைகள் மிகுந்த உபத்திரவத்தை உண்டாக்குகின்றன. ரோகமில்லாமல், திடத்துடன் ஒருவன் இருக்குங்கால், அவனுக்குள் இருந்து வருகின்ற ‘மைக்ரோப்’கள் பெலனற்றுக்கிடக்கும். ஆயின், அவனுடைய தேகவலிமை குன்றுவதால், இவைகளின் சேஷ்டைகள் விருத்தியாகின்றன; மேலும் அப்பொழுது தான் இந்த ஜந்துக்கள் தங்களால் இயன்றமட்டும் ஒரு மனிதனுக்குத் தீமையையும் விளைவிக்கக்கூடும். ஒவ்வொருவரிடத்திலும் எக்காலத்திலும் எல்லாவியாதிகளையும் உண்டுபண்ணக்கூடிய பல ஆயிரம் கிருமிகள் குடிகொண்டிருக்கின்றனவென்றே வைத்தியர்கள் சொல்லுகிறார்கள். தவிரவும், வெளிப்பக்கங்களில் இருந்து கொசு முதலியவைகள் எண்ணிக்கையற்ற ‘பாஸில்லை’களை நமக்குள் கடித்துக் குத்திவிடுகின்றன. ஸர்வவியாதிகளுக்கும் இப்படிப்பட்ட கிருமிகளே மூலகாரணமாகவும் இருப்பதால், அவைகளின் குணங்களைப் பற்றி மேல்நாட்டார் வெகுதூரம்கவனித்ததுண்டு. ‘மைக்ரோப்’களை நாம் எவ்வாறு தடுக்கலாம்; எவ்வாறு கொல்லலாம்; எவ்வாறு லக்ஷக்கணக்காகவும் அதிகரிக்கவும் செய்யலாம்?—இக்கேள்விகளுக்கெல்லாம் மேல்நாட்டு வைத்தியசிரோமணிகள் ஒருவாறு பதில்களையும் கண்டுபிடித்து வைத்திருக்கிறார்கள்.

‘பாஸில்லை’களின் இயல்பு எப்படிப்பட்டதென்னும் சரித்திரத்தை ஆராய்ந்து பார்க்கையில், அவைகளுடைய ருசிகளைப்பற்றி சில விஷயங்கள் தெரியவந்திருக்கின்றன. ‘மைக்ரோப்’ களால் தான் விரணவைத்தியம் ஆதியில் பலிக்காமலேயே இருந்தது. ‘ஸர்ஜன்’கள் பட்ட சிரமங்கள் முழுமையும், இவைகள் விரணத்தில் செய்யும் அக்கிரமத்தாலேயே, முற்றிலும் வீணாகப்போய்விட்டனவென்பதை லார்ட் லிஸ்டர் முதலில் கண்டுபிடித்தார். இக்கிருமிகளுடைய கொட்டத்தை அடக்குவதற்காக, லிஸ்டர் பிரபு ‘கார்பாலிக் லோஷன்’ என்னும் திரவியத்தை இவ்வுலகத்துக்குத் தந்து அருளினார். மைக்ரோப்களைக் கொல்வதற்கான இந்த உபாயத்தை லார்ட் லிஸ்டர் தனது நுண்ணறிவால் ஆராய்ந்து பார்த்த பிறகுதான், விரணவைத்தியத்திலும் மேல் நாட்டார் இம்மகத்தான வெற்றியையுமடைந்தார்கள். இவ்வாறு லார்ட் லிஸ்டர் ஓர் அபாரமான உபகாரத்தை நமக்குச் செய்திருக்கின்றார். அவருடைய ஞாபகத்திற்காகவே லண்டனில் ஓர் ‘இன்ஸ்டிட்யூட்’ ஸ்தாபிக்கப்பட்டு, அங்கே மிக்கக்கியாதிபெற்ற வைத்தியர்கள் மேன்மேலும் ஆராய்ச்சிகள் செய்து வருகிறார்கள். இக்கட்டிடத்தில்தான் கிருமிகளில் இரண்டாயிரம் வகைகள் வெகு ஜாக்கிரதையுடன் போஷித்து வளர்க்கப்பட்டுவரும் ஆச்சரியத்தையும் நாம் காணலாம். ஒவ்வொரு வகையிலும் கோடிக்கணக்கான ‘பாஸில்லை’கள் சுகமாக வாழ்ந்து வருகின்றன. இவைகளுக்காகவே பிரதிதினமும் பல வைத்தியர்கள் மிகவும் கவனத்தோடு சமையல் செய்து வருவதைக்கேட்க நாம் வியப்படைகின்றோம். இக்காலத்தில் மனைவிகளும் புருஷர்களுக்காகப்பிரியத்துடன் சமைப்பது துர்லபமாயிருக்கும்போது,

இம்'மைக்ரோப்களி'ன் பாக்கியத்தைப் பார்த்து நாமும் 'பொருமைப்படுவது முற்றும் சகஜமே! 'பாயஸமும்' 'ஹல்வாவும்' தான் இவைகளுக்குப் பிடித்தவைகளாம். நாம் சொல்வது பொய்யென்று இதைப்படிப்பவர்கள் சந்தேகித்தால், லண்டனிலிருக்கும் லிஸ்டர் இன்ஸ்டிட்யூட் டைரக்டருக்கு நேராகவே அவர்கள் எழுதுவதில் நமக்காக்ஷேபணையில்லை. நம்மைககாட்டிலும் ருசிபார்த்துத்தான் இவைகள் சாப்பிடுகின்றனவென்று டாக்டர் ஜான் ப்ராங்க்ஸ் கூறுகிறார். 'மைக்ரோப்'களும் பீமசேனனைப்போலவே வயிறுதாரிகளாகவும் இருப்பதாய்த் தெரிகின்றது.

அவைகளுள் ஒவ்வொரு ஜாதியிலும் சேர்ந்தவைகளுக்கு ருசியும் வேறு. குதிரை இரத்தத்திலிருந்து செய்யப்படும் ஓர் பாகுதான் 'நியுமோன்யா பாஸில்லைகளுக்கு' விருந்தாகும். அவைகளில் சிலவற்றை அப்பாகுமீது 24 மணிநேரம் வைத்திருந்தால், அவைகள் லக்ஷம் லக்ஷமாய் விருத்தியாகி விடுகின்றன. மேலும், க்ஷயரோகத்திற்குக் காரணமாயுள்ள 'ட்யூபர்குலர் பாஸில்லை'கள் தித்திப்பான பதார்த்தங்களையே விரும்புவதும் ஒரு விநோதம் தான். மைக்ரோப்களெல்லாம் மிகச் சிறிதான ஜந்துக்களானதால், அவைகள் அதி சீக்கிரத்தில் மரித்துவிடுமென்று எண்ணுவது பிசகு. சில கிருமிகள் 28 வருஷமாக இன்னமும் உயிருடன் இருக்கின்றன. இவ்வாறு ராஜ போகத்தில் 'மைக்ரோப்'கள் வளர்க்கப்பட்டு வந்தாலும், அவைகள் எல்லாவற்றையும் ஜாக்கிரதையாக ஜெயிலில் அடைத்து வைத்திருக்கிறார்கள். என்னதான் இருந்தாலும் தாமாகவே, நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த, மிகவும் கஷ்டப்பட்டு உழைத்து, தமது காலத்தைக் கழிக்கும் கிருமிகளைப்போல, இவ்வாறு சுகத்தில் வளர்ந்துவரும் 'பாஸில்லைகள்' மனிதர்களையும் ஈவு, இரக்கமின்றி, அவ்வளவாகக் கொள்வதில்லை. தங்களுக்கு ஆகாரமும் எளிதாய்க் கிடைத்துவிடுவதால், இந்த இன்ஸ்டிட்யூட்டில் போஷிக்கப்பட்டுவரும் 'மைக்ரோப்கள்' திருப்தியாகவே சும்மாயிருக்கின்றன. இவ்விஷயத்திலும் அவைகள் மனிதர்களைப் போலத்தான் காணப்படுகின்றனவல்லவா? பிறருடைய செலவில் முற்றும் கவலையென்பதின்றி, பெருத்த சௌக்கியத்தில் இருப்பவர்கள் ஒரு மாதிரியாய்ச் சோம்பேறிகளாகவே, எதற்கும் அலட்டிக்கொள்ளாமல், தங்களுடைய காலத்தைத் தள்ளிவிடுகின்றார்கள். ஆயின் தமது காலக்ஷேபத்திற்காக எப்பொழுதும் ஓடியாடித்திரிந்து கஷ்டப்பட்டு ஸம்பாதிப்பவர்கள் அப்படி யிருப்பதில்லை. செடிகளுக்கும் கொடிகளுக்கும் இக்குணம் வாய்ந்திருக்கின்றதென டாக்டர் ஜகதீச சந்திர போஸ் பிரத்தியக்ஷமாகக் காண்பித்திருக்கிறார். மழையிலும் வெய்யிலிலும், நனைந்துஉலர்கின்றவைகளைப்போல, என்றைக்கும் நிழலில் இருப்பவைகள் அரோகமாக வாழ்வது அரிதாயிருக்கும். நமது கண்களுக்குப் புலப்படாத இம்'மைக்ரோப்களும்' நம்மைப்போலவே நடப்பதை நாம் ஆலோசித்துப் பார்த்தால், ஈசுவரனுடைய சிருஷ்டியில் எல்லாம் ஒரே விதமாகத்தான் இருந்து வருவது நமக்குத் தெளிவாய் விளங்கும்.

''இரு கிழவர்களி''ன் தொடர்ச்சி
அடுத்த பகுதியில் வரும்.

புத்தக விளம்பரங்கள்.

சுதேசமித்திரன் புத்தகசாலை.

உதயலன்.

என்கிற கொற்கைச் சிங்களவன்.

ஷேக்ஸ்பியர் மகாகவி ஆங்கிலபாஷையில் எழுதியுள்ள ''ஓதெல்லோ என்கிற வெனிஸ் மோரியன்'' என்னும் ஓர் அருமையான நாடகம். அ. மாதவையா அவர்கள் மொழி பெயர்த்தமைத்தது. விலை அணா 12.

பத்மாவதி சரித்திரம்.

ஸ்ரீமான் அ. மாதவய்யா, பி.ஏ., எழுதிய அருமையான நாவல். புதிய பதிப்பு 10. படங்களுடன் கூடியது. இந்நூல் அலங்காரமாய் அநேக பழமொழிகளை அணிந்து சில மதுரமான கவிகளை உள்ளடக்கி, சிறுவர் சிறுமிகளும் எளிதிற் படித்தறியும்படியான தமிழ் நடையில் உள்ளது. விலை ரு. 2.

வர்த்தகயுக்தி.

வியாபார சம்பந்தமான விஷயங்கள் கொண்டது. ஒவ்வொரு தொழிலாளியும் அவசியம் படிக்க வேண்டிய நூல். இதனை மெச்சிப் புகழாத பத்திரிகைகள் கிடையா. முதற் பதிப்பு விளம்பரமின்றி விற்பனை. இரண்டாம் பதிப்பு பத்திரிகையில் விளம்பரம் செய்த ஒரு வாரத்துக்குள் விற்பனை. இது நான்காம பதிப்பு. விலை அணா 6.

சுதாமாலிகா.

இது ஒரு கதைக் களஞ்சியம்.

ஸி. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய விநோதக் கதைகளும், விசித்திரங்களும், பொதிந்து கிடக்கின்றன. கதா விநோதம், 33-விஷயங்கள் அடங்கியிருக்கின்றன, விலை ரூபா 1.

பாமாலை.

இராமலிங்க ஸ்வாமிகள், மாணிகக வாசகர் முதலியோர் திருவாய்மலர்ந்த சில அற்புத பாடல்களை, ஒரு பெரியார் தொகுத்தபடி அச்சிடப்பட்டிருக்கிறது. கோயம்பத்தூர், திருநெல்வேலி ஜில்லாக்களில் பிரதிவாரந்தோறும் படிக்கும் பக்த சிரோன்மணிகளுக்கு இநநூல் மிகவும் உபயோகமானது. விலை அணா 4.

சிறைவாசஞ் செய்யும்.
கிருஷ்ணஸ்வாமி சர்மா
அவர்களால் எழுதப்பட்டது.

	ரூ.	அ.
மகாத்மாகாந்தியின் குரு, டால்ஸ்டாய்	0	4
பண்டித மோதிலால் நேரு	0	2
மகாத்மா காந்தி	1	8
சித்தரஞ்சன தாஸ்	0	12
முஹம்மத் அலி, ஷவுகத் அலி	1	0
ஸ்வராஜ்யம்	0	8
லாலாலஜபதிராய்	0	8
சிவாஜி	1	0

திக்கற்ற இருகுழந்தைகள்.

இந்த நாவல் பெரியதாயும் வாசிக்கும் போது மடிக்கிளர்ச்சி யுண்டாக்ககூடியதாயுமுள்ளது. ஊபக்கச்சுவை மிகுந்து மகளிர் வாழ்க்கையிற் படிப்போர் யாவருக்கும் அனுதாபமும் ஒற்றுமை யுணர்ச்சியும் விளையும்படி செய்கின்றது. இது யாவருக்கும் விளங்கும் எளிய நடையை உடையது. படிக்கப் படிக்க மேன்மேல் மனதைக் கவரும் இனிய கதைப்போக்கையும் நன்கறிந்து கொள்ளலாம். விலை ரூ. 1-8.

மானேஜர், சுதேசமித்திரன்,
சென்னை.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

தந்தி விலாசம்: "ஆதிமூர்த்தி" பனாரஸ்.

பரிசுத்தமான சுதேச பட்டினால், சுதேச வெள்ளி, தங்க சரிகையால் நெய்யப்பட்ட சேலைகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள் சகல தினுசுகளும் தயாராக இருக்கின்றன. அவைகளின் விபரகேடலாக்கு ஆர்டர் செய்தால் அனுப்புகிறோம். கேட்லாக் இனாம்.

SILK PITAMBER Co.,
BENARES CITY.

Telegrams: "Adimoorthi" Benares.

சுதேசியமானது! உபயோகமுள்ளது!!

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒத்தைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

தமிழ் உலகு

ADVERTISEMENT RATES

(PER INSERTION)

Per 1	Page	Rs. 12
Per ½	Page	Rs. 7
Per ¼	Page	Rs. 4

Apply to

The Manager,
'THE TAMIL WORLD'
MYLAPORE.

தமிழ் உலகு

சந்தா விகிதங்கள்

(தபால் கூலி உள்பட)

வருஷம் 1-க்கு ரூபா 5.
வருஷம் ½-க்கு ரூபா 3.

மானேஜர்,
'தமிழ் உலகு'
மைலாப்பூர்.

பண்டித. கே. ஏ. வெங்கடாசல சாஸ்திரிகளின்

மதனானந்த மோதகம்

உலக வாழ்க்கைக்கு இன்றியமையாத இன்பம் தரும் தாதுவிருத்தி லேஹ்யம். இது ஜனனேந்திரிய சம்பந்தமான எல்லாப்பிணிகளையும் போக்கி வலுவைக் கொடுக்கும். விலை டின் 1-க்கு ரூ. 5. (வி. பி. தனியே)

மானேஜர்: ஆயுர்வேத மந்திரம், மைலாப்பூர், சென்னை.

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் D. சுந்தர வரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' கார்யாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.